**இலங்கை புகையிரத சேவை**

<u>இலங்கை புகையிரத சேவையின் புகையிரத நிலையங்களில் அமைந்துள்ள நிலையான உணவகங்களை குத்தகைக்கு விடுவதற்காக பெறுகைக்குழு கேள்வி கோரல்.</u>

இலங்கை புகையிரத திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ் காணும் உணவகங்களை இரு வருடகாலத்திற்கு உணவு வகைகளை விற்பனை செய்யும் சேவையை நடத்தி செல்வதற்காக கீழே தரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுபவம் உள்ள கேள்விதாரர்களிடம் இருந்து முத்திரை இடப்பட்ட பெறுகைக் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன .

1. அநுராதபுர புகையிரத நிலையத்தின் 1 வது மேடை

2. அநுராதபுர போக்குவரத்து அத்தியட்சகர் அலுவலகத்தின் முன்

3. மஹவ 4. யாழ்ப்பாணம் 5. பண்டாரவளை 6.பொலன்நறுவை

மேற்படி உணவகங்கள் பற்றிய விபரங்கள் பெறுகை ஆவணங்களில் அட்டவணை 01 இல் தரப்பட்டுள்ளது .

<u>01. தகைமைகள்</u>

குறித்த துறையுடன் தொடர்புபட்ட வியாபாரம் எனும் வகையில் செல்லுபடியான பதிவு மற்றும் 01 வருட அனுபவம் இருப்பதோடு நிதி ஸ்திரதன்மையை உறுதி செய்யும் முகமாக 03 மாதங்களுக்கான வங்கி அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

02.<u>கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளல்.</u>

பெறுகை ஆவணங்களை 2023 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 27 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை புகையிரத வர்த்தக மற்றும் சந்தைபடுத்தல் அலுவலகத்தில் அல்லது உணவகம் அமைந்துள்ள புகையிரத நிலையத்தில் பெற்று கொள்ளலாம். அதற்காக கொழும்பு-10, இலங்கை புகையிரத சேவையின் பிரதான நிதி உத்தியோகத்தரிடம் அல்லது குறித்த உணவகம் அமைந்துள்ள புகையிரத நிலையத்தின் நிலையாதிபதியிடம் மீளளிக்கப்படாத கேள்வி படிவக் கட்டணமாக ரூ.2,500/- தொகையைச் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை புகையிரத தலைமையகத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் பிரதி அத்தியட்சகரிடமோ அல்லது குறித்த புகையிரத நிலையத்திலோ சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் கேள்விப்படிவக் கட்டணத்திற்கு மேலதிகமாக அந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படும் கேள்விப் பிணையையும் செலுத்துதல் வேண்டும். ஒரு கேள்வி படிவத்தின் மூலம் ஒரு உணவகத்திற்கு மாத்திரமே விலை மனு சமர்ப்பிக்கப்பட முடியும் .

03. <u>கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல்</u>.

மேற்படி 02ம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு உணவகம் சார்பாகவும் பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளை முறையாக பூர்த்திசெய்து இரு உறைகளில் இட்டு முத்திரையிட வேண்டும். அவ்வுறைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வுறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் உணவகத்தின் கேள்வி இலக்கம் மற்றும் உணவகத்தின் பெயரை குறிப்பிட்டு , "புகையிரத நிலைய உணவகத்திற்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிட்டு அவ்வறையை முத்திரையிட்டு 2023 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 28 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு கிடைக்கக் கூடியதாக தலைவர் , திணைக்கள பெறுகைக்குழு , விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம் , புகையிரத தலைமையகம், ஒல்கொட் மாவத்தை , கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது புகையிரத தலைமையகத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் பிரதி அத்தியட்சகரின் உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். அந்த நேரத்தின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலினால் தாமதமாகிய மற்றும் தொலைந்துபோன விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

04. <u>கேள்வி ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்</u>.

2023 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 28ம் திகதி பி.ப 2.00 மணிக்கு மேற்படி மூன்றாம் பந்தியில் தரப்பட்டுள்ள விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரி அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி சமூகமளிக்க அனுமதிக்கப்படும்.

05. இலங்கை புகையிரத சேவையின் சகல ஊழியர்களுக்கும் மற்றும் அவர்களது குடும்பத்தின் நெருங்கிய அங்கத்தவர்களுக்கும் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான உரிமை இல்லை.

06. கேள்விகளை கோருவதற்கு முன்னர் மேற்படி சகல உணவகங்களையும் பரீட்சிப்பதற்காக சந்தர்ப்பங்கள் விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படுவதுடன் அதற்காக புகையிரத தலைமையகத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலிருந்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

07. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாக அமையும்

08. கேள்விதாரர்களுக்கு தேவையான மேலதிக விவரங்களை இலங்கை புகையிரத சேவையின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொ.பே .இல - 011 2421281 (நீடிப்பு - 8235)

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு ,
புகையிரத தலைமையகம்,
ஒல்கொட் மாவத்தை ,
கொழும்பு 10